[1981 ஆகஸ்ட் 27]

(அ) மதுரை மாவட்டம் உசிலை வட்ட சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய கிராமங்களில் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் பெருமளவில் மணற்காற்று வீசுவதும், அதனால் ஆயிரக்கணக்கில் விளை நிலங்கள் பாதிக்கப்படுவதும் அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் உரிய காற்றுத்தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய பாதிக்கப்பட்ட கிராமங்களில் காற்றுத்தடுப்பு மரச்சாலைகள் (shelter belts) போடப்பட்டுள்ளன. இப்பகுதியில் தற்போது 1658 மீட்டர் நீளம் தடுப்புச் சாலை நிலையாக உள்ளது. மீதம் உள்ள பரப்புகளில் புதிய மரங்கள் நடுதலும், நிலையான பராமரிப்பு வேலைகளும் நடைபெற்று வருகின்றன. உசிலம்பட்டி தாலுக்காவில் உள்ள பாதிக்கப்பட்டுள்ள பரப்புகள் யாவற்றையும், மேற்கண்ட பணிகள் மூலம் சீர்செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு பி. ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய பகுதிகளில் தடுப்பு வேலை நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று, உசிலம்பட்டி வட்டமும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில், வெள்ளம்-மலைப்பட்டு போன்ற பல கிராமங்களும் இந்தக் காற்றினால் பாதிக்கப்பட்டு, விளைச்சல் நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தப் பகுதிகளுக்கும் தடுப்பு நிவாரண வேலைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி, போடிநாயக்கனூர், ஆண்டிப்பட்டி ஆகிய இந்தச் சுற்று வட்டாரங்கள் அனைத்திற்கும் போடிநாயக்கனூரை தலைமை இடமாக வைத்து செயல்பட்டு வருகிறது, அது உசிலம்பட்டி வட்டாரத்தையும் கவனிக்கும்.

வேளாண் தொழில்கள் சமூகத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சூரியகாந்தி எண்ணெய்.

*வினா எண் 87—திரு து. புருஷோத்தமன்:—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

சூரியகாந்தி எண்ணெய் 1978-1979, 1979-1980 ஆம் ஆண்டுகளில் அரசுக்குச் சொந்தமான கழகத்தில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தில் 1978–1979, 1979–1980 ஆம் ஆண்டுகளில் முறையே 98.647 மெ. டன், 412.182 மெ. டன் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது.

திரு து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற சூரியகாந்தி எண்ணெ, அந்த அளவுக்கு விற்பனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து. இருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன். பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பாமோலின் எண்ணெய் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அந்த எண்ணெ சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேஷன் மூலம் ரேஷன் கடைகளில் கிடைப்பதில்லை. ஆனால், எல்லா மளிகைக் கடைகளிலும் அதிக விலைக்கு கிடைக்கின்றது. ஆனால், பாமோலின் எண்ணெயை விரும்பி வாங்குவது போல், மக்கள் சூரியகாந்தி எண்ணெயை வாங்குவதில்லை. அதிலே இருக்கின்ற சுவை இதிலே இல்லையென்ற காரணத் தினால், மக்கள் விரும்பி வாங்கும் அளவுக்கு சூரியகாந்தி எண்ணெயை சுவையாகத் தயாரிப்பதற்கோ அல்லது மக்கள் விரும்புகின்ற அளவுக்கு அதனை விளம்பரம் செய்யவோ அரசு முன்வருமா.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: போதுமான விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. எதையும் தாங்கும் இதயம் வேண்டு மானால் சூரியகாந்தி எண்ணெய்தான் உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதுதான் கொழுப்புச் சத்து சேராமல் தடுக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் அறிவார்கள். அதைப் பற்றிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லுவது நல்லது.

திரு. கோவைத்தம்பி: ஒருபுறம் சூரியகாந்தி பயிர் வளர்ப்பது குறைந்து கொண்டே வருகிறது. விவசாயிகள் அந்தப் பயிரை உற்பத்திச் செய்யும் வகையில் ஊக்கப்படுத்த அதிக விலை அவர் களுக்குக் கொடுக்கப்படுமா? அதே சமயத்தில் அந்த எண்ணெயின் விலை அதிகமாக இருக்கிறது. அதைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: முன்பு கொள்முதல் விலை ரூ. 3.60 ஆக இருந்தது இப்போது ரூ. 4.20 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனுடைய விலையைக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்போதே நஷ்டத்தில் இருக் கிறது.

திரு. மு. அப்பாதுரை: சூரியகாந்தி எண்ணெய் ஒரு கிலோ அடக்க விலை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கடையில் கேட்டால் தெரிந்து கொள்ளலாம்.

திரு. ஏ.கி. சண்முகம்: சூரியகாந்தி எண்ணெய் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை தமிழகத்தில் எவ்வளவு அது ஏற்றுமதி சய்யப் படுகிறதா?

1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தற்போது பொஞ்சப்பள்ளியில் சூரியகாந்தி எண்ணெய் ஆலை இருக்கிறது. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் உற்பத்தியாகும் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்களை கொண்டு அது இயங்கி வருகிறது. தற்போது சூரியகாந்தி எண்ணெய் பிற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்க சூரியகாந்தி விதை எப்படிக் கொள்முதல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

திரு. க. இரா. சின்னராசு: தர்மபுரி மாவட்டத்தில் உள்ள சூரியகாந்தி தயாரிக்கும் ஆலைக்கு போதிய சூரியகாந்தி எண்ணெய் வித்துகள் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அதற்கு மாற்றுத் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது விவசாயிகளை உற்சாகப்படுத்தும் வகையில் அதற்கான மானியத் தொகை கொடுக்கப்படுகிறது. அதிகமான விலைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆகவே, அந்தச் சிக்கல் இனிமேல் தீரும் என்று கருதுகிறேன்.

சூரியகாந்தி விதை கட்டுப்பாடு

*வினா எண் 88—திருபாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி தொழிற்பேட்டையில் வேளாண்மைத் துறையின் தாய் இணையகம் தயாரிக்கும் சனோலா எண்ணெய்க்கு மூலப் பொருளான சூரியகாந்தி விதை கிடைக்கவில்லையென்பது உண்மையா?

(ஆ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: (அ) ஆம், போதுமான அளவு கிடைக்கவில்லை.

(ஆ) (1) சூரியகாந்தி சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. (2) சூரியகாந்தி விதை கொள்முதல் ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. கொள்முதல் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (3) சூரியகாந்தி சாகுப்படியை அதிகரிக்கும் நோக்கத்துடன் சூரியகாந்தி சாகுபடித் திட்டம் ஒன்று மத்திய அரசின் உதவியுடன் பலவித மானியச் சலுகைகளுடன் எண்ணெய் வித்துக்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.